விலை சதம் 10

# காந்தீயம்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் திங்கள் வெளியீடு

Registered at the G. P. O. as a Newspaper in Ceylon

மலர் 6 | காந்தி நிலையம் - உருத்திரபுரம் (காந்தி ஆண்டு 99) 1969 ஜுன்-ஜுலை | இதழ் 9 - 10

**அறிவிப்பு**

காந்தி நூற்றுண்டு விழாவை முன்னிட்டு கிராமங்களிலும் நகரங்களிலும் சேவை செய்வதற்கு ஊழியர்கள் தேவை. விபரங்களுக்கு :

காந்தி நிலையம்
உருத்திரபுரம்

## சுபிட்சத்திற்கு வழி

உடலுழைப்புச் செய்யாத ஒருவனுக்குச் சாப்பிடும் உரிமை ஏது? ''நெற்றி வெயர்வை நிலத்தில் விழ உழைத்து உண்பாயாக'' என்று பைபிள் வேதம் கூறுகிறது. ஒரு இலட்சாதிபதி நாள்பூராவும் படுக்கையிலேயே புரண்டு கொண்டு, சாப்பாட்டைக் கூட அவருக்கு ஊட்டி விடுவதாயிருந்தால் அது நெடுங்காலம் நீடிக்காது; சீக்கிரம் வாழ்க்கையிலே அவருக்கு வெறுப்புத் தட்டிவிடும். ஆகையால், தேகப் பயிற்சியின் மூலம் பசியை உண்டாக்கிக் கொண்டு தன் உணவைச் சாப்பிடுகிறார். பணக்காரராயிருந்தாலும், ஏழையாயிருந்தாலும் ஏதாவது ஒரு வழியில் தேகப் பயிற்சி செய்ய வேண்டியிருந்தால், அது ஏன் சோற்றுக்குச் சம்பாதிப்பதற்கான வேலையாய் இருக்கலாகாது?

விவசாயிகளைத் தேகப் பயிற்சி செய்யும்படி யாரும் கேட்பதில்லை. மனிதர்களில் பத்தில் ஒன்பது பேருக்குமேல் பூமியை உழுவதன் மூலம் ஜீவனோபாயம் தேடிக்கொள்கிறார்கள். மீதமுள்ள பத்தில் ஒருவரும் தம்முடைய உணவைச் சம்பாதித்துக் கொள்ளுவதற்குத் தேவையான அளவுக்காவது இந்தப் பெரும் பான்மையோரின் உதாரணத்தைப் பின்பற்றினால், உலகத்தில் எவ்வளவு மகிழ்ச்சியும் ஆரோக்கியமும் அமைதியும் இருக்கும். இவர்களும் வேலை செய்ய ஆரம்பித்தால் விவசாயத்தில் உள்ள பல கஷ்டங்கள் சுலபமாகத் தீர்ந்துவிடும். தம் உணவிற்காக தாம் வேலை செய்ய வேண்டும் என்ற பொறுப்பை ஒவ்வொருவரும் ஏற்றுக் கொண்டால் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பாகுபாடும் அழிந்துவிடும். உலகமெங்கும் முதலாளி தொழிலாளி முரண்பாடு ஏற்பட்டிருக்கிறது. பணக்காரர்களைக் கண்டு ஏழைகள் பொருமைப்படுகிறார்கள். எல்லோரும் தம் உணவிற்காக உழைத்தால் இம் முரண்பாடு மறைந்து விடும்.

— காந்தியடிகள்.

## வறட்சி உதவி நிதி

சென்ற பத்தாண்டு காலம் கிளிநொச்சி உருத்திரபுரத்தில் காந்திசேவா சங்கம் ஓர் அனாதை ஆச்சிரமம் நடாத்தி வருகின்றது. சென்ற 8 மாதகாலமாகக் கிளிநொச்சிப் பகுதியில் மழையின்மை காரணமாகக் கடும் வறட்சி நிலை ஏற்பட்டுக் குளங்களும் கிணறுகளும் நீரற்றுப் போய் விட்டன.

இதன் பயனாக ஆச்சிரமத்தில் பயிர்ச் செய்கை பாழடைந்து போனது மல்லாமல் ஆச்சிரமத்தில் வாழ்பவர்க்குக் குடி தண்ணீர் வசதியுமே இல்லாமற் போய் விட்டது, ஆச்சிரமத்தில் இப்பொழுது 50 மாணவர்கள் வசிக்கிறார்கள். இப்பொழுது கிடைத்து வரும் சொட்டுக் குடிதண்ணீர் வசதியும் 2 கிழமைக்குள் இல்லாமற் போய் விடும் போல் தெரிகிறது. அப்படி நேரின் அறிதின் முயன்று நிறுவிய ஆச்சிரமமே கலைக்கப்பட வேண்டி நேரிடும். தண்ணீர் தந்துதவுமாறு கேட்டும் அரசினரிடமிருந்து இதுவரை ஒரு உதவியுங் கிடைக்கவில்லை. இந் நிலையை தவிர்ப்பதற்கு ஆழமான பெரிய கிணறு வெட்டினால் நல்லது என்று திட்டமிட்டுள்ளோம். இதற்கு உடனடியாக ரூபா 3,000 தேவைப்படுகிறது. இப்பணிக்கு இயன்ற உதவி செய்யுமாறு தங்களை வேண்டுகின்றோம். பணம் அனுப்ப வேண்டிய முகவரி,

திரு சி. க. வேலாயுதபிள்ளை
காந்தி நிலையம்
உருத்திரபுரம்.

## குன்றக்குடி அடிகளாரின் இலங்கை விஜயம்



தவத்திரு குன்றக்குடி அடிகளார் 1969 ஆகஸ்ற் மாதத்தில் இலங்கையில் சர்வோதய யாத்திரையை மேற்கொள்ள விருக்கிறார்கள். அகில இலங்கைக் காந்தி சேவா சங்க அழைப்பின் பேரில் வரும் அடிகளார் இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்று காந்திநூற்றுண்டு விழாவை முன்னிட்டு தீண்டாமையொழிப்பு, மதுவிலக்கு ஆகிய இலட்சியங்களை வைத்து சர்வோதய தத்துவ விளக்கம் கூறுவார்கள். இலங்கை சர்வோதய பணிகளுக்காக நிதியும் திரட்டுவார்கள்.

# காந்தீயம்

உருத்திரபுரம், (இலங்கை)
தொலே பேசி: 254
கிளிநொச்சி.
காந்தி ஆண்டு 99
1969 ஜூன் — ஜூலே


## தயை, தமம், தானம்

உலகத்து மக்களேப் பெருந்தீங்கிற்கு வழிவிடுவது காமம், குரோதம், உலோபம் என்பனவே உலகத்துப் பூசல்கள் எல்லாம் பேராசையினுலும், பகையினுலும், பிறருக்கு நலங்கருதாத உலோபத்தினுலுமே எழுகின்றன. சகல வித இச்சையும் காமமே. காமந்தான் குரோதத்திற்கும் உலோபத்திற்கும் வித்தாயமைந்தது.

இந்த மூன்று தீமைகளேயும் போக்குவது எப்படி? இவை தீயவை, இவற்றை நீக்கவேண்டு மென்று சும்மா நினேத்தால் போதாது. இவைமனிதன் விலங்கினத்திலிருந்து உருவாய காலம் தொடங்கி அவனேடியைந்திருப்பவை. இவற்றை அறிவறிந்து தான் மனிதன் விலத்தல் வேண்டும். எவ்வாறு இதைச் செய்யலாம்? விஞேபா அடிகள் தயை, தமம், தானம் என்பன பற்றித் தம்கிதைச் சொற்பொழிவுகளில் கூறியுள்ளார்கள். 'கிராமராஜ்யம்' என்னும் சர்வோதயப் பத்திரிகையில் இவைபற்றிய ஒரு குறிப்புள்ளது. அதில் ஒருவர் காமக் குரோத உலோபங்களே அகற்றுவதற்குரிய வழி தயை, தமம், தானம், என்று எடுத்துக் காட்டியுள்ளார்.

இதனேச் சிறிது ஆராய்வோம். சர்வோதயப்பணியில் கிராமக்கைப்பணி, கிராமதானம், சாந்திசேனே ஆகிய மூன்று அமிசங்கள் அடங்கி உள்ளன.

சாந்திசேனேப் பணியில் ஈடுபடுவதற்குத்தயை வேண்டப்படும். தம்மிலும், மொழி, மதம், கொள்கைமுதலியவற்ருல் வேறுபட்டவரில் எழும் குரோதம் இப்பணியினுல் மறைந்துவிடுகிறது. குரோதம் மறையத் தயை வளர்கின்றது. கிராமதானத்தில் ஈடுபடுவதாலும் அதில் தாமே நேரே பங்குபற்றுவதாலும் உலோபம் மறைந்து விடுகிறது. தானம்செய்யும்இயல்புவளர்கின்றது. சிரமதானமும் இத்தகையதே. கிராமதானம் சிரமதானம் இரண்டிலும் உலோபம் மறைவதோடு காமமும் மறைகின்றது. கிராமக்கைத்தொழிலில் ஈடுபடுவதாலும் அதனே ஆதரிப்பதாலும் தமம் வளர்ச்சியடைகிறது. இதில் காமக் குரோத உலோபம் மூன்றுமே அழிந்துவிடுகின்றன.

தமம் என்பது புலனடக்கம், ஒறுப்பான வாழ்வு, ஆடம்பரவாழ்வைக்கைவிடல், அயலாருடனும் சுற்றிலுள்ளாருடனும் ஒத்த முறையில் வாழ்தல் என்பன அடங்கிய ஒழுக்கமாம். இதற்குப் புலனடக்கம் அவசியம். பிறர்மாட்டுக் குரோதமில்லா வாழ்வும் தயையும் தமத்திற்கு அவசியம்.

இவற்றை நாம் சிந்திக்கும் பொழுது அவா, இன்னுச்சொல் கரவுள்ளம். இவற்றைவிட்டு வாழ்வதற்கு ஒரு சிறந்தவழி சர்வோதயம் என்பது புலப்படும் தவ வாழ்வு வாழ்வதற்குச் சிறந்தவழி கிராமப்பணியென்பதும் புலப்படும். எனவே சர்வோதயப் பணியே சிறந்த தவமென்பது உறுதியாகின்றது.

## அன்பர் தபால்

தாங்கள் எங்களுக்கு அளிக்கும் ஊக்கத்திற்கு எமது பணிவான நன்றி. நீங்கள்கடிதத்திற் குறிப்பிட்டபடி சர்வோதய பாத்திர இயக்கம் ஆரம்பிக்கவில்லே. சர்வோதய இயக்கம் ஆரம்பித்துள்ளோம் எமது இயக்கத்திற்கு அதிக தொண்டர்களேத் திரட்டிய பின்பே சர்வோதயப்பாத்திர இயக்கம் ஆரம்பிப்போம். 'காந்தீயம்' பத்திரிகையை வாசித்து அறிந்தேன். எமது இயக்கத்தைச் சேர்ந்த தொண்டர்கள் திடட்புலம் சிரமதான முகாமில் கலந்து கொண்டனர். 'காந்தீயம' பத்திரிகையைத் தொடர்ந்து வாசிக்க விரும்புகிறேன். எமது பல்கலேக்கழக நூல் நிலேயத்திற்கு ஒரு பிரதி அனுப்பினுல் அதன் மூலம் அநேக இளேஞரைக் கவர முடியு மென எண்ணுகிறேன். தங்கள் முயற்சிக்கு எங்கள் நல்லாசிகள்.

க. மயில்வாகனம்
சேர். பொன் இராமநான்
கனிட்ட பல்கலேக்கழகம்
பலாலி

## கிராமங்கள் தோறும் சிரமதானக் குழு

காந்தீய — சர்வோதய தத்துவத்தை அடிப்டையாகக் கொண்டு மக்கள் மத்தியில் சேவை செய்வதற்கு சிரமதானக் குழுக்களே அமைப்பதற்கான நடவடிக்கைகளே அகில இலங்கைக் காந்தி சேவாசங்கம் மேற்கொண்டுள்ளது. இக்குழுக்கள் சிரமதானத்தி லீடுபட விரும்பும் தொண்டர்களின் பெயர்களேப் பதிவு செய்து ஆங்காங்கு நடைபெறும் சிரமதானப் பணிகளில் ஈடுபடுத்துவதுடன் காந்தீய—சர்வோதயக் கருத்துக்களேயும் மக்களிடையே பரப்பும்.

ஒவ்வொரு குழுவிற்கும் ஒவ்வொரு அமைப்பாளர் இருப்பார். இவர் குழுவின் நிர்வாகியாக இயங்குவார்.

ஒரு குறிப்பிட்ட அளவிற்கு சிரமதானக் குழுக்கள் அமைக்கப்பட்டபின் அமைப்பாளர்களுக்கு காந்தி நிலேயம் உருத்திரபுரம் காந்திக்கிராமம்— அக்கராயன்குளம், கஸ்தூரிபாய் காந்தி நிலேயம்—தர்மபுரம், சர்வோதய நிகேதனம்—இரத்மலானே காந்தி சேவா சங்க நிறுவனங்களில் பயிற்சியின் பின் அவ்வப் பகுதிகளில் தொடர்ந்து சேவைசெய்யலாம்.

சிரமதானக்குழு அமைப்பாளர் போதிய பயிற்சியைப்பெற்று சாந்தி சேவை செய்யுமிடத்து சாந்தி சேவகர் என அழைக்கப்படுவார். மேலும் விபரம் தேவைப்படுவோர் சாந்தி சேவக அமைப்பாளர் காந்தி நிலேயம், உருத்திரபுரம் என்னும் முகவரியில் அறிந்து கொள்ளலாம்.

## செய்திகள்

அகில இந்திய சர்வோதய தலேவர்களுள் ஒருவரும் ஆதாரக் கல்விச்சங்கத் தலேவராக இருந்தவருமாகிய அமரர் ஸ்ரீ டப்லியு. ஈ. அரியநாகம் அவர்களின் இரண்டாவது ஞாபகதினம் உருத்திரபுரம் காந்தி நிலேயத்தில் ஜூன் மாதம் 20ஆம் திகதி கொண்டாடப் பட்டது.

ஃ ஃ ஃ ஃ

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கதின் 20 ஆம் ஆண்டுக் கூட்டம் ஜூலே மாதபிற்பகுதியில் நடை பெறும்.

## அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்துக் கொழும்புக் கிளை இரத்மலானையில் ஆதரவற்ற மாணவர்களுக்கு ஓர் இல்லம் நடாத்தி வருகின்றது. இவ்வில்லம் இரத்மலானை இந்துக்கல்லூரிச் சதுக்கத்தில், இந்துக் கல்விச்சபை அளித்த இரண்டு ஏக்கர் காணியில் அமைந்துள்ளது. இங்கு ஏழு மாணவர் தங்கி இந்துக்கல்லூரியில் கல்வி கற்று வருகிறார்கள். இவர்களுக்குத் தொழிற் கல்வியாக இல்லத்தில் அச்சுத் தொழில் கற்பிக்கப்படுகிறது. இத்துடன் காய்கறி பயிரிடுதல் பசு வளர்த்தல் ஆகிய துறைகளிலும் மாணவர் ஈடுபட்டுள்ளனர். இவர்களின் நாள் முறைச்செலவிற்காக 150 வீடுகளில் சர்வோதய(பிடிஅரிசி) பாத்திரங்கள் வைத்துள்ளோம். இவை மூலம் மாதந்தோறும் சுமார் 100 படி அரிசி கிடைக்கிறது. இது மாணவர் உணவின் ஒரு பகுதிக்கு மட்டுமே போதியது.

மாணவரின் புத்தகம், உடை, ஏனை உணவு, போன்ற பிற செலவுக்கு மாதந்தோறும் 120 ரூபா வரை தேவைப் படுகின்றது. ஒரு வருடத்திற்கு, 12 அன்பர்கள் மனமுவந்து 120 ரூபா வீதம் கொடுத்துதவினால் இத்தொண்டை நலம் பெற நடாத்தலாம். இன்னும் இப்பொழுதுள்ள இல்லத்தை விரிவாக்கும் திட்டத்தில் பெரியதொரு கட்டிடம் அமைக்கத் திட்டமிட்டுள்ளோம். இக் கட்டிடத்திற்கு ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் அடிக்கல் நாட்டியுள்ளார். இப்பணி முடிந்ததும் ஆச்சிரமத்தை விரிவாக்கி இன்னும் பல மாணவர்களை எடுத்துக் கல்விபயிற்றத் திட்டமிட்டுள்ளோம்.

மாணவர்க்குரிய கல்வி வெறும் புத்தகக்கல்வியாயிராது சமூகப்பணி உடலுழைப்பு ஆகியவற்றோடு இயைந்தகல்வியாக அமையவேண்டுமென்ற எண்ணத்துடனேயே இவ் இல்லத்தை நடாத்தி வருகின்றோம். சர்வோதயம், சிரமதானம், அகிம்சை ஆகியவற்றின் அடிப்படையிலேயே இப்பணி இயங்குகின்றது. மனமுவந்து இப்பணிக்கு வேண்டிய நிதியளித்துதவுமாறு யாவரையும் வேண்டுகிறோம்.

## சர்வோதய நிகேதன கட்டட நிதி

காந்தி நூற்றுண்டு விழாவை கொண்டாட காந்தி சேவா சங்கம் பல திட்டங்களை வகுத்துள்ளது. இதன் தொடர்பாக இரத்மலானை இந்துக் கல்லூரிச்சதுக்கத்தில் நிறுவப் பெற்றுள்ள சர்வோதய நிகேதனத்தில் காந்தி நூற்றுண்டு ஞாபகார்த்த மண்டபம் அமைக்கப் படுகிறது. இம்மண்டபத்தைவருகிற ஒக்ரோபர் 2ஆம் திகதி திறந்து வைப்பதற்காகக் கட்டட வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன. இப்பணிக்குப் பல அன்பர்கள் நிதி உதவியுள்ளனர். அவர்களின் பெயர்களை மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம்.

ஏற்கனவே வசூலான தொகை

| | ரூபா | சதம் |
|---|---|---|
| | 3933 | 00 |
| சரஸ்வதி லாட்ஜ் பம்பலப்பிட்டி | 251 | 00 |
| இந்தோ சிலோன் கபே கொள்ளுப்பிட்டி | 101 | 00 |
| ஆரியபவான் இரண்டாம் குறுக்குத் தெரு கொழும்பு | 101 | 00 |
| ஓர் அன்பர் | 500 | 00 |
| ஆகமொத்தம் | 4886 | 00 |

கொழும்புப் பகுதியில் சர்வோதயப் பாத்திரங்கள் மூலம் சித்திரை, வைகாசி மாதங்களில் 212 கொத்து அரிசி பெறப்பட்டுள்ளதுடன் ரூபா 32-68 சதமும் வசூலாகி உள்ளது. இது விடயத்தில் பொது மக்கள் காட்டும் உற்சாகம் போற்றத்தக்கதாகும்.

சித்திரை மாதத்தில் 88வீடுகளில் இருந்து 88 கொத்து அரிசியும் 14ரூபா 17 சதமும் பெறப்பட்டது.

இதேபோல வைகாசி மாதத்தில் 104 வீடுகளில் இருந்து 124 கொத்து அரிசியும் 18ரூபா 51 சதமும் பெறப்பட்டுள்ளது.

## சர்வோதய மகாநாடு

18ஆவது சர்வோதய மகாநாடு வடஇந்தியாவில்பீஹார்-ராஜ்கிர் என்ற இடத்தில்1969 ஒக்ரோபர் 25,26,27 ஆம் திகதிகளில் நடைபெற இருக்கிறது. இந்த புத்த க்ஷேத்திரத்தில் அந்தச்சமயம்'சாந்திஸ் தூபி' ஸ்தாபிக்கப்படும். ஆஸ்திரேலியா, ஆசியா நாடுகளின் பிரமுகர்களின் கருத்தரங்கும் நடைபெறும். காந்தி நூற்றுண்டை முன்னிட்டு மிகச் சிறப்பாக நடைபெறவிருக்கும் இம்மகாநாட்டிற்கு இலங்கையிலிருந்து செல்ல விரும்புபவர்களுக்கு விசேட ஒழுங்குகள் செய்து தரப்படும். விபரங்களுக்கு கௌரவ பொதுச் செயலாளர் அகில இலங்கைக் காந்தி சேவா சங்கம், காந்தி நிலையம் -உருத்திரபுரம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

## கொள்ளுப்பிட்டி சிரமதானக் குழு

கொள்ளுப்பிட்டிப் பகுதியில் வாழும் பல அன்பர்கள் 21 . 6 . 69 மாலை 5மணியளவில் ஹட்சன்தெரு 59 ஆம்இலக்கத்தில் கூடிச்சிரமதானக் குழுவை அமைத்தனர். இங்கு சமூகமளித்த தலைமை ஆசிரியர் திரு. ச. அரியரத்தினம் பல அரிய ஆலோசனைகளைக் கூறினார் இக் குழு தேசீய நலனைக்கருதி காந்தீய—சர்வோதயலட்சியத்திற் கமைய காந்தி சேவா சங்க ஆதரவில் பணியாற்றும். சிரமதானக்குழுவின் இணை அமைப்பாளர்களாக திரு. கி. ஜகதேவா ஆசிரியரும் திரு. ச. கனகசபாபதி அவர்களும் தெரிவு செய்யப் பெற்றனர். குழுவின் அடுத்த கூட்டம் மேற்படி இடத்தில் 12.7.69 மாலை 5 மணிக்கு நடைபெறும்.

---

**''காந்தீயம்''**

சம்பந்தமான சகல விபரங்களுக்கும் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்

நிர்வாகி
சர்வோதய நிகேதனம்
212, 10 ஆவது குறுக்குத்தெரு,
இந்துக்கல்லூரிச் சதுக்கம்,
இரத்மலானை (இலங்கை)

## சிரமதான முகாம்

"காந்தி சேவா சங்கம் இந்நாட்டில் எல்லோரும் போற்றத்தக்க வகையில் அமைதிப் பணிபுரிந்து வருகிறது. காந்தி அடிகளின் மகோன்னத லட்சியமான சர்வோதய தத்துவத்தை நிர்மாணப் பணிகள் மூலம் பரப்ப முயற்சி எடுத்து வருவதைக் குறித்து மகிழ்ச்சி அடைகிறேன்'' என வண. நிக்கஹெட்டியே சந்ததோ அவர்கள் இரத்மலானை சர்வோதய நிகேதனத்தில் யூன் 13, 14, 15 ஆம் திகதிகளில் நடைபெற்ற காந்தி நூற்றுண்டுஞாபகார்த்தமாக நிறுவப்படும் கட்டடத்தைக் கட்டுவதற்கான சிரமதான முகாமிற்கு தலைமை தாங்கி உரையாற்றுகையில் கூறினர். அவர் மேலும் குறிப்பிட்டதாவது. காந்திஜீ இந்தியாவிற்குமட்டும் உரிய வரல்லர், அவர் உலகிற்கு வழி காட்ட அவதரித்த மகான். அவருடைய தத்துவம் இலங்கையிலும் பரவவேண்டும். இதற்காக நாம் ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும்.

பம்பலபிட்டி சரஸ்வதி லொட்ஜ் நிர்வாகி திரு. எஸ். இராமகிருஷ்ணன் அவர்கள் முகாமை ஆரம்பித்து வைத்துக்கூறியதாவது.

சர்வோதய நிகேதனத்தில் நடைபெறும் நிர்மாண வேலைகள் வரவேற்கத்தக்கவை. இப்புண்ணியபூமிக்குவரக் கிடைத்ததைக் குறித்து பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மூன்று நாட்களும் 150 ஊழியர் கொங்கிறீற்கல் அரிதல், புல் நடுதல் கட்டடத்திற்கு மண் நிரப்புதல், துப்புரவு செய்தல் ஆகிய பணிகளை நிறைவேற்றினர்கள்.

வெலிசறை ஸ்ரீ வெங்கடேசஸ்வர வஸ்திராலய அதிபர் திரு. ஆவுடையப்பன் சிரமதானத் தொண்டர்களுக்குஉணவு அளித்தார்.

சிரமதானத்தில் பங்கு பற்றியவர்கள்.
தெஹிவளை தமிழ்ப்பாடசாலை
இரத்மலானை இந்துமாணவர் விடுதி
நுகேகொட தமிழ் மகாவித்தியாலயம்
கொழும்புவிவேகானந்தவித்தியாலயம்
நில் வீதி மத்தியமகா வித்தியாலயம்
பாபர்.வீதி ஆரம்ப தமிழ்க் கலவன் பாடசாலை
சர்வதேச சிவில் சேவை இயக்கம்
சென்ற் அந்தோனி இளைஞர் முன்னணி கொழும்பு 13
கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம்.

இளைஞர்களே !

உங்களுக்குத் தொழில் இல்லையென கவலை ஏன் ?

★ கமம்
★ நெசவு
★ தும்பு
★ அச்சு
★ தையல்
★ மர வேலை

ஆகிய துறைகளில் இலவசப் பயிற்சி அளிக்கிறோம்.

விபரங்களுக்கு:-
காந்தி நிலையம்
உருத்திரபுரம் (தபால்)
அல்லது
சர்வோதய நிகேதனம்
இந்துக் கல்லூரிச் சதுக்கம்,
இரத்மலானை.

காந்தீய—சர்வோதய
தத்துவங்களை அறிவதற்கு
கிராமராஜ்யம், சர்வோதயம்
ஆகிய பத்திரிகைகளைப்
படியுங்கள்.
காந்தி நிலையம்
உருத்திரபுரம்

பனைச்செல்வம்
(திங்கள் வெளியீடு)
தனிப் பிரதி சதம் 50.
சென்னை மாநிலப் பனை வெல்லக்
கூட்டுறவு சம்மேளனம்
52, கெங்கு ரெட்டி தெரு
எழும்பூர், சென்னை 8.

இலங்கையில்:
காந்தி நிலையம்
உருத்திரபுரம்

குறிப்பு: ஒவ்வொரு போயா நாட்களிலும் சிரமதானம் தொடர்ந்து நடைபெறுகிறது. விரும்பியவர்கள் பங்கு பற்றலாம்.

## சர்வோதயப் பாத்திர அன்பர்கள்

சர்வோதய பாத்திரத்தில் நாள் தோறும் பிடி அரிசி இட்டு இதனை மாதந்தோறும் சர்வோதய இயக்கத்திற்கு அளிக்கும் அன்பர்களின் பெயர்களைச் சென்ற இதழில் வெளியிட்டிருந்தோம். மேலும் பல அன்பர்களின் பெயர்களை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

ஈ எஸ் பெர்னுர்ந்து மாவத்தை வெள்ளவத்தை
திரு பி. குணசிங்கம்
திரு டி. கணேசன்
திரு டி. எஸ். தம்பிஐயா
திரு எஸ். நேசதுரை
திரு என். குமாரசாமி
திரு எஸ். ஸ்ரீதாஸ்
திரு என். கந்தசாமி
திருமதி கே. முத்துவேலு
திரு எஸ். இராசன்
திரு ஆர். என். மருதன்
திரு எஸ். தனபாலசிங்கம்
திரு எஸ். திருநாவுக்கரசு
திரு சி. சண்முகம்
திரு என். நடராஜா
திரு சி. பரராசசேகரம்
திரு எஸ். சிவபாதம்
திரு ஏ. ஆர். பத்மநாதன்
திரு இரத்தினசிங்கம்
திரு இ. குணசிங்கம்
திரு க. இராமலிங்கம்
திரு விசாகப்பெருமாள்
39 வது ஒழுங்கை
திரு பி. சிவசுப்பிரமணியம்
பண்டாரநாயக்க மாவத்தை கொழும்பு
திரு எஸ். ரி. சின்னத்துரை
திரு கே. கந்தையா
திரு எஸ். இராசையா
திரு எஸ். கனகசபை
திரு வி. சதாசிவம்
திரு டபிள்யு. எஸ். இரத்தினம்
திரு வி. வீரவாகு

இப்பத்திரிகை அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்திற்காக உருத்திரபுரம் சி. க. வேலாயுதபிள்ளை அவர்களால் சர்வோதய அச்சக உபகரணங்களின் உதவியுடன் கொழும்பு மெய்கண்டான் அச்சக லிமிட்டெட்டில் அச்சிடப் பட்டது.